செ.வெ.எண்-48 நாள்-26.08.2021

# பத்திரிக்கைச் செய்தி

தாட்கோ மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்க்கு குறுகிய கால (1 மாதம் முதல் 6 மாதம் வரையிலான) திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக் கொள்ள கட்டணமில்லாமல் அளிக்கப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவ, மாணவியர்கள் தகுதிக்கேற்ப தங்களுக்கு தேவைப்படும் தொழில் நுட்ப பயிற்சியினை மேற்கொள்ள www.training.tahdco.com என்ற தாட்கோ இணையதளத்தின் வழியே பதிவேற்றம் செய்து, விரும்பும் பயிற்சியினை இத்திட்டத்தில் கட்டணமின்றி பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும் மாணவ, மாணவியர்களுக்கு போக்குவரத்து படிகள் வழங்கப்படும். இப்பயிற்சியின் முடிவில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு SCVT / SSC சான்றிதழ்கள் வழங்கப்பட்டு பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பிற்கு வழிவகை செய்யப்படும்.

திறன் மேம்பாட்டு பயிற்சி முடித்து சான்று பெற்ற பயிற்சியாளர்கள் மாவட்ட மேலாளரிடம் தாங்கள் பயின்ற பயிற்சிக்கு தொடர்பான தொழில் தொடங்கிட https;//application.tahdco.com என்ற தாட்கோ இணையதளத்தில் தொழில் முனைவோர் திட்டம் மற்றும் இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் விண்ணப்பத்தினை பதிவு செய்து அரசு மானியத்துடன் கூடிய வங்கி கடனுதவிபெற ஆவண செய்யப்படும். கூடுதல் விபரங்கள் பெற அறை எண்.225, 2வது தளம், அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தாட்கோ, மாவட்ட மேலாளர் அலுவலகத்தை அணுகவும், தொ.பே.எண். 04329 - 228315. ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**